தமிழகம்

சிறப்பு ஆசிரியர்: தவத்திரு குன்றக்குடி அடிகளார்

மலர் 4] சோபகிருது ஐப்பசி 4. 21—10—63 கிழமை இதழ். விலை – 10 காசுகள். [இதழ் 45-47

அடுக்கிய கோடி நன்மைகள் எய்தி உலகம் அமைதியும் ஆக்கமும் பெற்று வாழ்ந்திட

குன்றக்குடி ஸ்ரீசண்முகநாதப் பெருமானுக்கு இன்று கோடி அருச்சனைத் தொடக்கம்

குன்றக்குடி ஸ்ரீ சண்முகநாதப் பெருமானுக்குக் கோடி அருச்சனை செய்வதற்காக ஐந்துகோவில் தேவாலய பரம்பரை தருமகர்த்தா ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் (தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள்) தலைமையில் ஆதீன மடலாயத்தில் அன்பர்களின் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம், தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் தலைமையில் கோடி அருச்சனைக் குழு ஒன்று அமைக்கப்பெற்றது.



கோடி அருச்சனைக்குழு

மேற்படி குழுவிற்கு, திருவாளர்கள், உ. ராம மெ. சுப. சேவு. மெய்யப்ப செட்டியார், க.வெ.சித.வேங்கிடாசலம்செட்டியார், சா. நா. அ. சொ. அண்ணாமலை செட்டியார், நா. ஆறுமுகம்பிள்ளை, கா. அரு. கா. காடப்ப செட்டியார். ராம.சின்னத்தம்பி அம்பலம் ஆகியோர் உப தலைவர்களாகவும்,

திருவாளர்கள் மெ.நா.சித. சிதம்பரம், மெ.செ. ச. மு. மெ. முத்துராமன் இருவரும் செயலாளர்களாகவும்,

திருவாளர்கள் குமட சு. சுப்பிரமணியன், பழ. தெ. ராம. தேனப்பன், ராம. கண்ணையா அரு.உ.வீர. அழகப்ப செட்டியார், அரு. வ. சாமிநாதன் செட்டியார் ஆகியோர் உதவிச் செயலர்களாகவும், திரு. நா. மாணிக்கம் செட்டியார் பொருளாளராகவும், திரு. வி. சுந்தரராஜன், பி.ஏ.,பி.எல்.நிருவாகி

யாகவும் தேர்ந்தெடுக்கப் பெற்றனர்.

குழுவினரின் வேண்டுகோள்

கோடி அருச்சனைக் குழுவினர் ஒரு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

'பாரத தேசம் போரிலிருந்து காப்பாற்றப் பெறவேண்டும்; இவ்வுலகு இடர் நீங்கி அன்பு, அறம் - அமைதி பெற்று அருளாக்கம் நிரம்பிய நல்வாழ்வு வாழ அருள்பாலிக்கவேண்டும் என பிரார்த்தித்து இக்கோடி அருச்சனை வழியாடு நடத்தப் பெறுவதாகவும், குவலயத் தார் அடுக்கிய கோடி நன்மை பெறவேண்டும் என்ற குறிப்புடன் தொடர்பாகக் கோடி அருச்சனை செய்து, திருமந்திரத்தாலாய திருவருட்பொலிவைக்கண்டு ஆயபயன் பெற வேண்டுமென விரும்புவதாகவும்,

இன்றுதொடக்கம்

கோடி அருச்சனை சோபகிருது ஆண்டு ஐப்பசித் திங்கள் 4-ஆம் நாள் (21—10—63) திங்கட்கிழமை தொடங்கி குரோதி ஆண்டு வைகாசி விசாகத்தன்று நிறை வெய்தும் என்றும் இவ்வரிய திருப்பணிக்கு நிறையப் பொருள் வேண்டும் என்பதால், அன்பர்கள் தாராளமாகப் பொருளுதவி செய்து ஸ்ரீசண்முகநாதன் திருவருளைப் பெறுமாறு கேட்டுக் கொள்ளுவதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

அப்பர் தரும் விருந்து:

குறிக்கோள் வேண்டும்

ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் ஏதேனும் ஒரு குறிக்கோள் இருக்க வேண்டும்; குறிக்கோள் இல்லாத வாழ்க்கை ஒளியில்லாத விழி போல, ஊற்றில்லாத கேணிபோல பயனற்றுக் கெட்டுப் போகும். எனவே, வாழ்க்கையில் குறிக்கோள் வேண்டும் என்ற உயரிய கருத்தை அப்பரடிகளின் பாடல் ஒன்று மிக அழகாக வலியுறுத்துகின்றது. பாடல் இதோ:

பாலனாய்க் கழிந்த நாளும்
பனிமலர்க் கோதை மார்தம்
மேலனாய்க் கழிந்த நாளும்
மெலிவொடு மூப்பு வந்து
கோலனாய்க் கழிந்த நாளும்
குறிக்கோள் இலாது கெட்டேன்
சேலுலாம் பழன வேலித்
திருக்கொண்டீச் சுரத்து ளானே!

★

தமிழகம்

அன்பாலே மக்கள்குலம் இணைந்து வாழும்
அருள்நெறியைப் பரப்புதலே எங்கள் நோக்கம்

மலர் 4] 21—10—63 [இதழ் 45-47

கணேசமூர்த்தி வழிகாட்டுகிறார்

'சமய நெறிக்கும், சமுதாய நெறிக்கும் ஓர் இணைப்புப் பாலத்தை உருவாக்க வேண்டும்; சமய நெறியும் சமுதாய நெறியும் மண்ணும் மரமும்போல ஒன்றோடொன்று இணைந்து பிணைந்து வளர வேண்டும்' என்ற தூய உள்நோக்கத்தின் அடிப்படையில் அருள்நெறித் தந்தை தவத்திரு அடிகளார் அவர்கள் தோற்றுவித்த அருள்நெறித் திருப்பணி மன்றம் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வருகிறது. பள்ளிகள், இல்லங்கள் பற்பல எழுப்பியும் ஆண்டுதோறும் பல்துறை மாணவ மாணவியர்க்கு உதவித்தொகை வழங்கியும் வருகிற திருப்பணி மன்றத்தின் தூய தொண்டினை—தொடர்ந்த சேவையினை நாமறிவோம்—இந்த நாடறியும்.

'நான் ஓர் ஏழை' என்று அருள்நெறித் தந்தை அவர்கள் சில நேரங்களில் கூறுவார்கள்; அது சிலருக்கு வியப்பாக இருக்கலாம். அருள்நெறித் தந்தை அவர்களின் பொருளாதார நிலையையும், அவர்கள் எடுத்துக் கொண்டுள்ள பொதுநலத் தொண்டுகளையும் அறிந்துணர்ந்தவர்கள், 'ஏழை' என்று கூறிக் கொள்வது கேட்டு வியப்படைய மாட்டார்கள். என்றாலும், அந்தத் தொண்டுகளுக்காக அருள்நெறித் தந்தையவர்கள் இது காறும் எவரிடமும் 'பொருளுதவி' கேட்டதில்லை. எனினும், அண்மையில் தந்தை அவர்களின் தலைமையின் கீழ் இயங்கிவரும் ஈரோடு அருள்நெறி ஆதாரப் பயிற்சிப் பள்ளியில் பயின்று, திப்பம்பாளையம் ஊராட்சி ஒன்றிப்பு உயர் துவக்கப் பள்ளியில் பணியாற்றிவரும் அன்பர் மு. ஆ. கணேசமூர்த்தி என்பவர் அருள்நெறித் திருப்பணி மன்ற வளர்ச்சிக்குத் தாமே உதவ முன்வந்திருக்கிறார், மன்ற வளர்ச்சிக்குத் திங்கள் தோறும் ஒரு ரூபாய் வீதம் சந்தாத்தொகையுதவத் தாம் முடிவு செய்திருப்பதாகவும், ஒவ்வொரு ஆங்கில மாதமும் 5ந் தேதிக்குள் சந்தாவை அனுப்பி வைப்பதாகவும் ஒரு நீண்ட கடிதம் எழுதியிருக்கிறார். அன்பர் கணேசமூர்த்தியின் உணர்வை — நிறுவனப் பற்றை—நாம் மனமுவந்து பாராட்டுகிறோம். அன்பர் குறிப்பிட்டுள்ளதுபோல, இத்தொகையைச் சிறிதென நாம் கருதவில்லை. திருப்பணி மன்றத்தின் ஆதரவுபெற்ற அன்பர்கள் அனைவரும், திங்கள்தோறும் கூட அல்ல — ஆண்டு தோறும் ஆளுக்கு ஒரு ரூபாய் அனுப்பினாலே அது பேருதவியாகக் கருதப்பெறும். திருப்பணி மன்ற வளர்ச்சிக்கும், தவத்திரு தந்தை அவர்களின் கொள்கை வளர்ச்சிக்கும் அது பெரிதும் ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும். எனவே, வலிய வந்து பலருக்கும் முன் மாதிரியாக வழிகாட்டியுள்ள அன்பர் கணேசமூர்த்தியை நாம் திருப்பணி மன்றத்தின் சார்பில் மீண்டும் பாராட்டுகிறோம்.

— துணை ஆசிரியர்

வாழ்விக்க வந்தோர் வரலாறு

23. பூசலார் நாயனார்

'தொண்டை நாடு சான்றோருடைத்து' என்பார்கள். அத்தகு உயர்மிகுந் தொண்டைநாட்டின் நலமிகு சிறப்புப் பெற்ற நன்மூதூராம் திருநின்ற ஊரில், மறையவர் குலத்துதித்த மாண்பினர் பூசலார் நாயனார். பூசலார் வேதம் முதலிய கலைகளிற் சிறந்து விளங்கினார். சிவ பக்தியிலும், சிவனடியார் பக்தியிலும் மேலோங்கித் திகழ்ந்தார். சிவனடியார் விருப்பமறிந்து, அதனைச் சிந்தை நிறைவோடு செய்து முடிக்கும் செம்மை சான்றவர்.

பூசலார் சிவபெருமான் விரும்பியுறையும் திருக்கோயில் ஒன்றெழுப்ப வேண்டுமென்று பெரிதும் விரும்பினார். கோயில் கட்ட வேண்டுமென்றால் ஏராளமான பொருள் வேண்டுமே! அதற்காகப் பொருள் தேடும் முயற்சியில் ஈடுபட்டுப் பெரிதும் முயன்றார்; எனினும் பஞ்சத்தின் காரணமாக முயற்சி வெற்றிபெறவில்லை! ஆம். சிறிதும் பொருள் கிடைக்கவில்லை. செய்வதறியாமற் சிந்தை தளர்வுற்றார் பூசலார். இறுதியாக, செஞ்சடையண்ணலார்க்குத் தம் நெஞ்சகத்தே திருக்கோயில் எழுப்ப உறுதி கொண்டார். சிந்தையால் பல்நிதியும் திரட்டினார்; மாதேவன் ஆலயத்திற்கு மனத்தினால் அடிகோலினார்; சாதனத்தோடு நல்ல தச்சர்கள் தம்மையும் மனத்தினால் தேடிக் கொண்டார்; கோயில் உறுப்புக்கள் யாவும் குறைவிலா தமைத்தனர்; மதிற் சுவர் முதலியன வகுத்தனர். இங்ஙனம் மனத்திலே கோயில் எழுப்பிப் பிரதிட்டை நாளும் நிச்சயம் செய்தனர்.

இஃதிவ்வாறிருக்க, காடவர் கோமான் இராசசிம்ம பல்லவன் காஞ்சியிலே சிவபெருமானுக்காகப் பெரும் பொருட் செலவில் அழகிய திருக்கோயில் ஒன்றமைத்துப் பிரதிட்டைக்கென ஒரு நன்னாளும் குறித்தனர்; அந்நாளுக்கு முன்னாள் இரவு, ஏடலர் கொன்றை வேய்ந்த எம்பிரான், காடவர் கோமான் கனவிலே தோன்றி,

"நின்றஊர்ப் பூசல் அன்பன்
நெடிதுநாள் நினைந்து செய்த
நன்றுநீ டாலயத்து
நாளைநாம் புகுவோம் நீஇங்கு
ஒன்றிய செயலை நாளை
ஒழிந்துபின் கொள்வாய்"

என்று திருவாய் மலர்ந் தருளினார். காடவர்கோன் உடனே கண்விழித்தெழுந்தார். "அந்தத் திருப்பணி செய்தார் தம்மைக் கண்டு நான் வணங்க வேண்டும்" என்று பெரிதும் விரும்பித் 'தண்டலைச் சூழல் சூழ்ந்த' திருநின்ற ஊரைச் சார்ந்தார்; அங்கு, "பூசலார் எழும்பிய திருக்கோயில் யாண்டுளது?" என்று பலரையும் வினவினார்; "பூசலார் இங்கு அப்படி ஒருகோயிலும் கட்டவில்லையே" என்றவிடையையே அவர் யாண்டும் பெற்றார். அதன்பின், காடவர் கோன், 'மெய்ப்பெரு மறையோரெல்லாம் வருக' என்று அழைப்பு விடுத்தார்; அந்தணர் அனைவரும் வந்தனர்; அவர்கள் பால், "மாசிலாப் பூசலார் யார்?" என வினவினார். "பூசலார் இவ்வூரினரே" என்று கூறி, அவரை அழைத்துவர அந்தணர் ஓடினர். காடவர்கோன் அவர்களைத் தடுத்து, அவர்தம் துணையோடு தாமே பூசலாரைச் சென்றெய்தி தொழுது வணங்கி, "நீவிர் இங்கு எண்டிசையோரும் ஏத்த எடுத்த திருக்கோயில் யாண்டுளது? அண்டர் நாயகரைத் தாபித்தருளும் நாள் இந்நாள் என்று எம்பெருமானால் அறியப் பெற்றேன்; அடிகளைக் கண்டு அடிபணிந்து செல்ல வந்தேன்" என்று கூறினார்.

மன்னவர் உரைப்பக் கேட்ட மாசிலாப் பூசலார் மருண்டு நோக்கி, 'என்னையோர் பொருளாக் கொண்டே எம்பிரான் அருள் செய்தார்! யான் அண்டர் நாயகர்க்குத் திருக்கோயில் எழுப்ப முயன்றேன்; பொருள் கிடைத்திலையாதலின், மனத்தினால் கோயில் கட்டினேன்' என்று கூறி, கோயில் எழுப்பிய முறையையும் கூறினார். செய்தி கேட்டு மன்னர் வியப்பெய்திப் புரையறு சிந்தை அன்பர் பெருமைதான் என்னே!' என்று கூறிப் பூசலரைப் போற்றி வணங்கி விடைபெற்று முரசெறி தானையோடு மீண்டும் தன் மூதூர் சென்றார். பூசலாரோ, தமது மானதக் கோயிலில் மாதேவனைப் பிரதிட்டை செய்து, சில காலம் வழிபாட்டில் ஈடுபட்டுப் "பொன்புனை மன்றுளாடும் பொற்கழல் நீழல் புக்கார்."

(10-ம் பக்கம் பார்க்க)

தீயன நினையாதே! தீயன பேசாதே! தீயன செய்யாதே! என்பதே அகிம்சை

[குன்றக்குடியில் 9-10-63ல் நடைபெற்ற காந்தியடிகள் பிறந்தநாள் விழாவில் நடைபெற்ற பட்டிமன்றத்திற்குத் தலைமை வகித்துத் தவத்திரு அடிகளார் அவர்கள் ஆற்றிய முன்னுரை, முடிப்புரை ஆகியவற்றின் சுருக்கம்.]

அகிம்சையை இன்றைய உலகம் ஏற்காது-ஏற்கமுடியாது; ஒருவனை ஒருவன் அடுதலும் தொலுதலும் புதுவதுஅன்று; இவ்வுலகத்து இயற்கை'' என்று புறநானூறு பேசுகின்றது. எனவே உலகம் உள்ள வரை பிற உயிர்களைத் துன்புறுத்தல்-இம்சித்தல் இருந்தே தீரும்'' என்று இங்கு சிலர் குறிப்பிட்டார்கள்.

உலகம் வளர்ந்து செல்லக் கூடியது: இன்று ஆங்காங்கு பல்வேறிடங்களில் அடி உதை கத்திக் குத்துகள் நிகழ்ந்த போதிலும் அவையாவும் முன்னைய அளவிற்கு—பண்டைக் காலத்தில் இருந்த அளவிற்கு இன்று இல்லை.

அன்றைய நிலையில் வாளை—கத்தியை இடையில் செருகிச் செல்வது மதிப்பிற்குரியதாகப் போற்றப் பெற்றது; இன்று பழிப்பிற்குரியதாகக் கருதப் பெறுகிறது.

வாளைச் செருகிக் கொண்டு செல்லவும் மனிதன் கூசுகிறான்.

மனைவியை அடித்து உதைத்து அடக்கியாளுவது இடைக்காலத்தில் ஆண்மகனுடைய—கணவனுடைய 'கவுரமாக'-வீரச் செயலாக கருதப் பெற்றது. இன்று வெறுத்து ஒதுக்கத்தக்க இழி நிலையாக எண்ணப் பெறுகிறது.

உழவனை அச்சுத்திச் சவுக்கால் அடிப்பது அன்றைய மிட்டா மிராசுகளின் செல்வாக்கைக் காட்டுவதாக இருந்தது. அச்செயல் இன்று யாரும் ஏற்கமறுக்கின்ற இழி செயலாகக் கருதப்பெறுகிறது. இவையெல்லாம் காலத்தின் வளர்ச்சியால் ஏற்பட்டுள்ள நற்பண்புகள். இம் முன்னேற்றம், ஏதோ திடீர் என்று ஏற்பட்ட முன்னேற்ற மன்று. அதாவது,

சிறு தம்ளரில் விரைவில் உயரும் நீர்மட்டம் போல் விரைவில் பெற்ற உயர்நிலையன்று. விரிந்து உயர்ந்த ஏரியில் துளித்துளியாக நீர் சேர்ந்து சிறிது சிறிதாக ஏற்றமடையும் நீர் நிலை போன்றது. மெல்ல மெல்ல உயர்ந்து வரும் இக்காலத்தில், அன்று பாடிய புறநானூற்றின் வேறு பல அடிகள் ஒத்துவந்தாலும் "ஒருவனை ஒருவன் அடுதலும் தொலுதலும்.......இயற்கை" என்ற வரிகள் எக்காலத்துக்கும் ஒத்து வருவன என்று எப்படிக் கொள்ள முடியும்? 'ஒருவனை ஒருவன் அடுதலும் தொலுதலும் புதுவதன்று' என்ற கருத்து இன்று ஒத்து வருவதாக இல்லை.

காங்கோ போன்ற உலகப் பிரச்சனைகள் எல்லாம் இன்று படைபலத்தால் தானே தீர்க்கப் பெற்றன? உலகமே படைபலத்தை நம்பி வாழும் நேரத்தில் அகிம்சை பேசுவதால்—அகிம்சையை ஏற்பதால் பயன் என்ன? என்ற வினா எழுப்பப்பெற்றது.

குறிப்பிட்ட ஒரு நல்ல கொள்கை, அது எந்தக் கொள்கையாயினும் நடைமுறைக்கு வருதல் என்பது சற்றுக் கடினமானது தான். தீயது விளைவது போல நன்மைஅத்துணை விரைவில் விளைந்து விடுவதில்லை. எனது வீட்டில் கொசு இருக்கிறது என்பதற்காக அடுத்த வீட்டிலும் கொசு இருக்கிறது என்றோ எனது வீட்டில் இல்லாததால் அடுத்த வீட்டிலும் கொசு இல்லை என்றோ திடீர் என முடிவு கட்டிவிடுவது கூடாது. அகிம்சையைப் பற்றிச் சிந்திக்கக்கூடிய-உணரக் கூடிய—நடைமுறையில் கடைப் பிடிக்கக் கூடிய சூழ்நிலை இன்றைய உலகம் முழுமையும் மெல்லமெல்லப் பரவி வருகின்றது. அணு ஆயுத சோதனைத் தடை, அணு ஆயுத, உற்பத்தித் தடை போன்ற தூய நல்லுணர்வுகள் தலையெடுத்து வரும் காலம் இது. இந்த நேரத்தில் அகிம்சையை மேற்கொள்வதால் ஏற்படுகிற நன்மை மிகப் பெரியது.

பண்டைய நிலையில் அகிம்சையால் விளையும் பயன் அவ்வளவு பெரிதன்று. ஏனெனில் அன்றைய ஆயுதம் வாளும் ஈட்டியும் அம்புந் தான். அவற்றால் விளையும்

உள்ள வலிமையுடைய ஒருவனே அகிம்சையை நிலைநாட்ட முடியும்!

தீமையைவிட மிக மிகக் குறைவு. அன்று ஒரு மனிதன் கையில் இருந்த வாளால் ஒரு சிலரே இறந்துபடநேரிட்டது. இன்றோ ஒரு சிறு அணுகுண்டால் கோடிக் கணக்கான மக்கள் ஏன் இந்த உலகமே அழிந்து விடக்கூடும். எனவே இன்றையச் சூழ்நிலையில்தான் அகிம்சை நெறி அணு ஆயுத சோதனைத் தடை, அணு ஆயுத உற்பத்தியைக் குறைக்க நிகழும் கிளர்ச்சி—படைபலக் குறைப்பு முதலியன அகிம்சை நெறி வெற்றியடையத் தொடங்கியுள்ளமைக்கு அறிகுறியாகும். இவையெல்லாம அன்பு நெறியின்—அருள்நெறியின்—அகிம்சை நெறியின் வெற்றிகள்!

அகிம்சையால் சாதித்தது என்ன? அகிம்சை பேசிவரும் நாடு சாதித்த சாதனைகள் அனைத்துமே அகிம்சையை அடிப்படையாகக் கொண்டவைதாமோ? கோவா விடுதலையும், இந்திய சமஸ்தானங்களின் இணைப்பில் ஐதராபாத்து சமஸ்தான இணைப்பும் அகிம்சையால் நிகழ்ந்தனவா? என்று கேட்டனர்.

எந்த ஒரு செயலையும் இடம் பொருள் ஏவல்கட்கு ஏற்பவே நல்லதா கெட்டதா என்று முடிவு செய்ய வேண்டும். பொதுவாக, நன்மை பயக்கும் ஒரு செயல் இடம் பொருள் ஏவல்கட்கு ஏற்பத் தீமைபயப்பது போலத் தோன்றுவதும், தீமைபயப்பது போன்ற ஒரு செயல் இடம் பொருள் ஏவல்கட்டு ஏற்ப நன்மை பயப்பதும் உண்டு.

மனிதன் வாழும் வீட்டிற்குள் பாம்பு நுழைந்து அடுத்தவனைத் தீண்ட முயலும்போது அகிம்சை பேச முடியுமா? அடித்துக்கொல்லுதல்தானே மரபு? வீட்டில் புகுந்த பாம்பை அடித்துக் கொல்வது வழக்கம் என்ற எண்ணத்தில் காட்டிற்குள் புகுந்து புற்றினைப் பெயர்த்துப் பாம்புகளை எல்லாம் தேடிப் பிடித்து அடித்துக் கொல்வது சரியாகுமா? முன்னது கடமை வழிப்பட்ட அகிம்சை. பின்னது இம்சை.

ஒரு மனிதன் இறந்து விட்டால் அவனது உடலைச் சுடுவது கடமை. அது இம்சையாகாது. சுடுவதை நினைவிற்கொண்டு உயிருடன் இருப்பவனது உடலைச் சுடுவது சரியாகுமா? எதற்கும் இடம் பொருள் ஏவல் காலம் உண்டு!

பண்டைய பாரத நாட்டின் இந்திய சமஸ்தானங்கள் எல்லாம் ஒன்றி விட்ட பிறகு ஏதோ ஒருசில சமஸ்தானங்கள்-ஐதராபாத்துப் போன்றவை தந்நலத்தின் காரணமாக விலகிநின்றால் அங்ஙனமே விலகிநிற்க அவற்றிற்கு இடம் கொடுத்தால் இந்தியப் பெருநாட்டின் ஒற்றுமை என்னாவது? ஆயினும் சமஸ்தான இணைப்பும் கோவா விடுதலையும் தூய அகிம்சையின் அடிப்படையில் அமையாதது போலத் தோன்றுகின்றது.

இரண்டும் தூய அகிம்சையின் முன்னிலையில் இம்சையாகத்தான் காட்சியளிக்கும். ஆயினும் ஒன்று பட்ட அரசியல் சூழ்நிலையை உருவாக்க—அடிமைத்தளையை அறுத்து மானம் காக்க ஏற்பட்ட இவ்வகிம்சை நிகழ்ச்சிகள் இரண்டும் வடுவாயினும் கடமை வழிப்பட்டனவாகக் கொள்ளத்தக்கனவாகும்.

அகிம்சை வழிநிற்க வேண்டுமானால் படைகளே கூடாது. நம் நாட்டிலோ படைபலம் பெருக்கும் நிலை நிலவுகின்றது. இதுஒன்றே இன்றையச் சூழ்நிலையில் அகிம்சையை நிலைநாட்ட முடியாது என்பதற்குச் சான்றாகாதா என்றனர்.

இன்றைய உலகிற் சிலர் எடுத்த எடுப்பிலேயே சண்டை போடுபவராக உள்ளனர். ஆயினும் அவர்களும் கூட தம் கை கண்ணைக் குத்தும் போதும் தம் பல் நாக்கைக் கடித்துவிடும் போதும் அவற்றை நொந்து கொள்கிறார்களா? அவற்றின் தவறுகளுக்காக அவற்றை வெட்டி வீசி எறிந்து விடுவதில்லையே

ஆனால் அண்டை அயலான் தனக்கு ஏதேனும் சிறு தீங்கு

தற்பெருமை கொள்ளுகின்றவனிடம் அகிம்சை குடிகொள்வதில்லை!

செய்து விட்டாலும் கத்தியும் கையுமாகப் புறப்பட்டு விடுகின்றனர். இத்தகைய மனிதர்கள் உளவலிமையற்றவர்கள். இவர்கள் தான் கத்தியும் கம்பும் தேடுவர். உள்ள வலிமை உடையவர்கள் தீங்கினையும் பொறுத்திருக்கும் ஆற்றல் பெற்றிருப்பார்கள்.

படைபலத்துக்காக நாம் படையைப் பெருக்குவது உண்மைதான்! எனினும் நமது படைப்பெருக்கம் தற்காப்புக்காகவேயன்றி மற்றவனை அடிப்பதற்கு அன்று.

பாக்கிஸ்தானிய விமானங்கள் பல நம் எல்லையில் ஊடுருவிய போதும் நாம் அமைதியில்—அகிம்சையில் முழுநாட்டம் கொண்டதாலேயே உடன்படையெடுத்துப் போர் தொடுக்கவில்லை; மாறாக மறுப்புக்கூறினோம்; உண்மையை உலகுக்கு உணர்த்துவதற்காக அறிக்கையும் விடுத்தோம்.

தவிர்க்க முடியாத சூழ்நிலையில் நாம்நம் நாட்டைக்காப்பதற்காகப் போர் தொடுக்கிறோமே தவிர, அடுத்தவனை வென்றால் பேரரசாகலாம் என்ற போர்வெறி காரணமான வீம்புக்காக நம்படையைப் பெருக்கவில்லை. வலியச்சென்று பிறர் பொருளைத் தீண்டக்கூடாது- தீண்டுவது தவறு என்ற கொள்கையுடையது நம் அரசு. எனவேதான் பாகிஸ்தானும் சீனாவும் இழைத்த பல்வேறு தொந்தரவுகளையும் துன்பங்களையும் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தோம். அவ்வப்போது உலக அரங்கிற்கு ஆட்சேபக் குரல் கொடுத்து உண்மை உணர்த்தினோம். அறிக்கையும் விடுத்தோம். நாட்டின் மானம் பறிபோகின்ற நிலை வந்தபோதுதான்—பாரதசமுதாயத்தைக் காக்க வேறு வழியில்லை என்ற நிலையில்தான் சீன அரசாங்கத்துடன் போரைத் தொடுத்தோம். நாம் அகிம்சை நெறியில் வாழ்ந்ததாலேயே உலகில் குறுகிய மனப்பாங்குடைய ஒரு சில நாடுகளைத் தவிர, ஏனைய அனைத்தும் நம் பக்கம் ஒருமுகமாகத் திரண்டெழுந்தன. சீனா செய்தது அக்கிரமம் அது ஆதிக்க வெறிபிடித்து அலைகின்றது என்று குரல் கொடுத்தது உலகம். நாம் காட்டிய அகிம்சைக்குக் கைமேல் பலனாக இன்று நமது அணிவகுப்பில் உலகமே முன்னின்று தோள் கொடுக்கக் காத்து நிற்கிறது. நமக்குத் தோள் கொடுத்துதவுவதில் தமக்குள் போட்டியும் போடுகின்றன சில நாடுகள். இந்த நிலையைச் சிந்தித்துப் பார்த்தால் நாம் படையைப் பெருக்கி இருப்பது அண்டை அயலாருடன் வலியச் சென்று சண்டையிடுவதற்காகவன்று நம் அகிம்சை நெறியைத் தமக்கு சாதகமாக்கிக் கொண்டு ஆக்கிரமிக்க முயலும் நாடுகளுக்கு நம் வீரநிலை காட்டி நம் சமுதாயத்தை நலமுற வாழ்விப்பதற்காகவே என்பது புலனாகும்.

அகிம்சை என்பது பிற உயிர்களைக் கொல்லாமல் இருப்பது மட்டுமன்று. அது மிகமிக நுண்ணியது; ஆழ்ந்த பொருளுடையது. ஒருவன் அகிம்சை நெறியாளன் என்றால் அவன் தன் எண்ணத்தாலும் பேச்சாலும் செயலாலும் பிறர்க்குத் துன்பம் வருவனவற்றை நினைக்காமல்—பேசாமல் செய்யாமல்வாழ வேண்டும். அதுதான் அகிம்சை. தீயன நினையாதே தீயன பேசாதே—தீயன செய்யாதே என்பதுதான் அகிம்சை.

மனிதன் அண்டைவீட்டுடன் பக்கத்து நாட்டுடன் ஒட்டி வாழும் போது சிற்சில துன்பங்களைப் பெறுகிறான். அவற்றை எல்லாம் பொறுத்துக் கொள்ளத்தக்க உள்ளம் வேண்டும்; உள்ள வலிமை உடையவனே அகிம்சையை நிலைநாட்டுவான். உள்ள வலிமையற்றவன் எடுத்ததற்கெல்லாம் சண்டையிடுவான். —போர் தொடுப்பான். உள்ள வலிமையுடன் அகிம்சையைப் பேணுவதால் அவன் அடையும் பயன் மிகப்பெரியது. அகிம்சை நெறியில் நிற்பவனிடம் அறிவு பெருமை ஆற்றல் இவை வளரும்.

அகிம்சை நெறியாளன் மேற்கொள்ளத்தக்க நெறிகளுள் முதலாவது அவன் சாட்சிக்காரன் காலில் விழுவதைவிட சண்டைக்காரன் காலில் விழுவது நல்லது என்பதாகும். அதன்மூலம் அவன் பெரும்பகுதி நன்மையைப் பெறலாம் — சமாதானத்தை நிலைநாட்டலாம்.

அவன் பின்பற்ற வேண்டிய இரண்டாவது நெறி, தன் ஆத்திரத்தைக்'குறைத்துக் கொள்ளுதல். மற்றவன் மீதுதான் கொண்டிருக்கும் ஆத்திரத்தைக் குறைப்பதற்கு ஒரேவழிதான் உண்டு. அது தன்கருத்துக்கு மாறுபட்டவனிடம்—மாற்றுக் கருத்துடையவனிடம் யோசனை கேட்பதாகும். தன் கருத்துடன் ஒத்த கருத்துடையவனிடம் பெறும் யோசனை ஆத்திரத்தைக் கிண்டிக்கிளறி விடப்பயன் படுமே தவிர அணைக்கப் பயன்படாது. நெருப்பும் பெட்ரோலும் நெருப்பும் எண்ணெயும் ஒத்துப்போகக் கூடியன. நெருப்பை அணைக்க எண்ணெய் அல்லது பெட்ரோலின் துணையை நாடக் கூடாது; மாறாக அதனுடன் மாறுபட்ட மணல் தண்ணீர் இவற்றின் துணையைநாடவேண்டும் அதுபோல தன் ஆத்திரத்தைக் குறைத்துக் கொள்ள மாறுபட்ட கருத்துடையவனையே நெருங்கி ஆலோசனை கேட்க வேண்டும்.

(8-ம் பக்கம் பார்க்க)

அருள்நெறிக் கல்வியகங்கள் சார்பில் காந்தியடிகள் பிறந்தநாள் விழா

குன்றக்குடி அருள்நெறித் திருப்பணிமன்றக் கல்வியகங்களின் சார்பில் திருமுருகன் அருள்நெறி ஆசிரியைப் பயிற்சிப்பள்ளி அரங்கில் 9-10-63ல் காந்தியடிகளின் பிறந்த நாள் விழா சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. விழாவிற்கு தவத்திரு அடிகளார் அவர்கள் தலைமை வகித்தார்கள். இவ் விழாவையொட்டிச் சேரியில் சமூகத்தொண்டு நடைபெற்றது. குழந்தைகள் குளிப்பிக்கப்பெற்றுப் புத்தாடை அணிவிக்கப்பெற்றனர். பின்னர் சமவிருந்து நடைபெற்றது.

கருத்தரங்கம்

பின்னர் ''தீண்டாமையை ஒழிப்பதில்'' என்ற பொதுத் தலைப்பின் கீழ் நடைபெற்ற கருத்தரங்கில் 'மாணவர் கடமை' என்பதுபற்றி குமாரி வெ. விசாலாட்சியும், மகளிர் கடமை' என்பதுபற்றி குமாரி க. இராசேசுவரி, குமாரி கி. திருவல்லி ஆகியோரும், சமூகத்தார் கடமை' என்பது பற்றி திரு. லெ. இராமநாதனும் 'அரசின் கடமை' என்பது பற்றி சட்டமன்ற உறுப்பினர் திரு. க. பா. பழனியும் பேசினர்.

தவத்திரு அடிகளார் அவர்கள் தலைமையுரை வழங்குகையில், பாரத நாட்டு வரலாற்றில் காந்தியடிகள் சிறந்ததோர் இடத்தைப் பெற்றிருப்பதாகவும் அவரது நடைமுறை வாழ்க்கையை நாம் பின்பற்றி நடப்பதே நாம் அவருக்குச் செய்யும் தலையாய கைம்மாறு என்றும் குறிப்பிட்டார்கள்.

பட்டி மன்றம்

பிற்பகல் தவத்திரு அடிகளார் அவர்கள் தலைமையில் 'இன்றையச் சூழ்நிலையில் காந்தியடிகளின் அகிம்சை நடைமுறைக்கு வருதல் இயலுமா இயலாதா? என்ற தலைப்பில் ஒருபட்டி மன்றம் நடைபெற்றது.

'இயலும்' என்ற தலைப்பில் சட்ட மன்ற உறுப்பினர் திரு. க. பா. பழனி விவாதத்தைத் தொடங்கி வைத்தார். இயலாது' என்ற தலைப்பில் சிவகங்கை கல்லூரி தமிழ்ப்பேராசிரியர் திரு.லெ. இராமநாதன் விவாதத்தைத் தொடங்கி வைத்தார். 'இயலும்' என்ற கட்சியைத் தொடர்ந்து திரு. டி. பழனிச்சாமி, குமாரி. சொர்ணவல்லி, திரு. சோ. நாகலிங்கம், திரு. நா. பாலசுப்பிரமணியம், திருமதி. கிருஷ்ணம்மாள், ஜெகந்நாதன் ஆகியோரும், 'இயலாது' என்ற கட்சியைத் தொடர்ந்து திரு. அ. கு. சண்முகசுந்தரம், குமாரி. இராமலெட்சுமி, திரு ரா. பொன்ராசன், திரு. க. செல்வராசு, திரு. பா. சோமசுந்தரம் ஆகியோரும் பேசினர். பின்னர் தலைவர் தவத்திரு அடிகளார் அவர்கள் தமது முடிப்புரையில், 'இன்றையச் சூழ்நிலையில் காந்தியடிகளின் அகிம்சை நடைமுறைக்கு வருதல் இயலும் என்றும் இன்றைய உலகியலுக்கு அகிம்சையே தேவையானது என்றும் வலியுறுத்திக் கூறினார்கள். பின்னர் தமிழ்நாடு நிலக்கொடை இயக்கத் தலைவர் திரு. ச. ஜெகந்நாதன் சொற்பொழிவாற்றினார். கலை நிகழ்ச்சிகளுக்குப் பிறகு தலைவர் பரிசுகளை வழங்கினார்கள்.

விழாத் தொடக்கத்தில் அடிகளார் உயர் நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர் திரு. அ. சோமசுந்தரம் பி. ஏ., எல் டி. அனைவரையும் வரவேற்றார். இறுதியில் நன்றிகூற நாட்டுப் பண்ணுடன் விழா நிறைவெய்தியது.

ஆசிரியைப் பயிற்சிப் பள்ளி விளையாட்டு விழா

குன்றக்குடி திருமுருகன் அருள்நெறி ஆசிரியைப் பயிற்சிப் பள்ளியின் விளையாட்டு விழா தவத்திரு அடிகளார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு மாவட்ட கூட்டுறவு துணைப்பதிவாளர் திரு. எஸ். தினகரன் எம். ஏ. பரிசுகளை வழங்கினார்.

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

அகிம்சையைப் பின்பற்ற நினைப்பவன் கொள்ளத்தக்க மூன்றாவது நெறி தற்பெருமை கொள்ளாமை ஆகும். தற்பெருமை கொள்பவனிடமும் அகிம்சை குடிகொள்வதில்லை. மற்றவனுக்கு மதிப்புக் கொடுப்பனிடமே அகிம்சை நின்று நிலைக்கும்.

முடிவாக, அணு ஆயுதத் தடையும் போர் நிறுத்தச் சூழலும் உருவாகிவரும் இக்காலத்தில் உலகம் அகிம்சையை ஏற்று நடக்க இயலும் இன்றைய உலகிற்கு அந்த அகிம்சை நெறிதான் வழிகாட்ட முடியும் என்று உறுதியாகக் கூறி வாழ்த்தி விடைபெற ஆசைப்படுகிறோம்.



அன்பர்களின் கேள்விகட்கு அடிகளாரின் பதில்கள்

பழநி நகர்மன்ற உயர்நிலைப்பள்ளி நிகழ்ச்சியொன்றுக்கு தவத்திரு அடிகளார் அவர்கள் சென்றிருந்தபோது கொடுக்கப்பெற்ற கேள்விகளுக்கு இப்பகுதியில் தவத்திரு அடிகளார் அவர்கள் பதில்சொல்லுகிறார்கள்:

கேள்வி:

உருவ வழிபாடு, அருவ வழிபாடு இவற்றில் எது சிறந்தது? எப்படி?

- கா. முத்துமணியக்காரன், பழனி.

பதில்:

தரத்திற்கும் தகுதிக்கும் ஏற்றவாறு அமையும்.

கேள்வி:

தங்களைச் சிலர் நாத்திகர் என்றும் பார்ப்பனத் துவேஷி என்றும் கூறுகிறார்களே, அந்தக் கூற்றுப் பற்றித் தங்கள் கருத்தென்ன?

- ஓர் அன்பன், பழனி.

பதில்:

அது அவர்கள் பார்வை.

கேள்வி:

நாட்டுக்கு நன்மை விளைவிப்பவன் யார்? செலவாளியா? சிக்கனக்காரனா?

- பாரதி, பழனி.

பதில்:

சிக்கனக்காரனே.

கேள்வி:

கடவுளை வணங்குவதால் நாம் அடையும் நன்மைகள் யாவை?

- எஸ். அண்ணாமலை, பழனி.

பதில்;

ஒன்றா இரண்டா அடுக்கிச் சொல்ல? எண்ணற்ற நன்மைகள்.

கேள்வி:

ஆரம்பப் பள்ளிகளிலேயே ஆங்கிலம் கற்பிக்கப் பெறுவது நல்லதா?

-சு ப. பத்மநாதன், பழனி.

பதில்:

நாம் நல்லதென்றே கருதுகிறோம்.

கேள்வி:

ஆன்மிகம் என்றால் என்ன?

- கா. பொ. பழனிச்சாமி, பழனி.

பதில்:

ஆன்மாவின் வளர்ச்சிக்கு உரிய கொள்கை.

கேள்வி:

நூல்கள் அறிஞனை உண்டாக்கினவா? அறிஞன் நூல்களை உண்டாக்கினானா?

- கே. முத்து, பழனி.

பதில்:

அறிஞனே நூல்களை உண்டாக்கினான்.

கேள்வி:

மதம் வளர்ந்தால் பிரிவினை உணர்வுகள் நீங்குமா? ஓங்குமா?

- கா. முத்துமணியகாரன், பழனி.

பதில்:

நியாயமான மதவளர்ச்சி பிரிவினையைத் தடுக்கும்.

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

காடவர் கோமான் பெரும் பொருட் செலவில் அழகிய திருக் கோயில் அமைத்திருக்கும் போது, பூசலார் கட்டி முடித்த மானதக் கோயிலுக்கு இறைவன் முதன்மை கொடுத்திருப்பதன் பொருள் என்ன?

பூசலார் கட்டி முடித்தது மானதக் கோயில்தான். எனினும், அவர் நீண்ட நாள் நினைந்து நினைந்து கட்டி முடித்த நீண்ட - உயர்ந்த ஆலயம் அது; இறைவன் நெக்கு நெக்கு நினைந்து உருகுபவர் நெஞ்சத்துள் உறைபவன் அன்றோ? எனவே,

''அந்தர் யாகந்தன்னை
முத்தி சாதனமாக
அறைவர் பெரியோர்''

என்ற கொள்கையின்படி பூசலாரின் மானதக் கோயிலுக்கு இறைவன் முதன்மையளித்ததில் வியப்பொன்றுமில்லை!

அடிகளார் சுற்றுப்பயணம்

அக்டோபர் 63

23 தாராபுரம்
உடுமலைப்பேட்டை

24 சென்னை

27 காஞ்சிபுரம்

28 தஞ்சை

30 ஊராளிப்பட்டி (R.Dt.)
திருப்புத்தூர் ,,

31 திருமுல்லைவாசல்

குன்றக்குடி பாரதிவிழாக் கவியரங்கம் 2

பாரதி என் காதலி

வெ. தங்கசாமி, புதிய 9-ஆம் வகுப்பு

எட்டய புரத்தில் பிறந்துவிட்டாள் - இன்(று)
எனக்கொரு காதலி ஆகிவிட்டாள்
மட்டிலா அன்பைச் சொரிந்ததனால்—என்
மனமகிழ் காதலி ஆகிவிட்டாள்

பாரதி போன்றொரு பெண்மணியை—இந்தப்
பாரினில் எங்குமே கண்டதில்லை
பாரினில் வேறெதும் மேலிதில்லை—அவள்
பரிவுக்கும் அன்பிற்கும் ஒப்புமுண்டோ?

சாதியால் சமயப் பிரிவுகளால்—இவள்
சாற்றிடும் செல்வம் ஏழைமையால்
மோதியே உழல்வது காதலன்று—அதில்
மோதுவ தன்புப் பிணைப்பன்றோ!

தூய்மையாம் காதலைப் பேசிடுவோர்—எங்கள்
தூயநற் காதலை ஏசுகின்றார்
பேய்என என்னுள்ளம் கலங்கியதால்—என்
பேய்க்குணம் மாற்றம் மொழிந்திடுவாள்

ஒழுக்கமும் அன்புத் தூய்மையுமே—அவள்
ஒப்பிலாக் காதல் வளர்த்திடுமாம்
பழுத்துக் கனிந்தநற் காதலிலே—இன்பம்
பழுத்தநல் அறிவே வேண்டுவதாம்.

மற்றவர் ஏச்சுகட் கஞ்சாமல்—நம்
மனத்தை நல்ல நெறியுய்த்தே
உற்றவர் போற்றும் கொள்கைக்காய்—உடன்
உழைப்பதே காதலர் குறியென்றாள்

நாட்டின் மொழியை நம்மினத்தை—நாம்
நலமுறப் போற்றிக் காத்திடுவோம்
ஏட்டிற் சிறந்த புகழ்பெறுதல்—மிக
ஏற்றது வாழ்வினில் என்றுரைத்தாள்

காதலி சொன்னசொல் நான்கேட்டேன்—அந்தக்
கன்னலின் இனியாள் பாரதியை
மேதினி தன்னிலே நான்போற்றி—மிக
மேலாம் நன்மைகள் பெற்றிடுவேன்.

செய்திச் சுருள்

மின்விளக்குத் திறப்பு விழா

ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோயில் கொண்டுள்ள தேனி மலையில் கொப்பனுபட்டி திரு மு. ப. மு. பழநியப்ப செட்டியார் அமைத்த மின்விளக்குகளை 6-10-63ல் தவத்திரு அடிகளார் அவர்கள் ஏற்றி வைத்து ஒளி நிறைந்த அருள் நெறி பற்றி அரிய விரிவுரை நிகழ்த்தினுர்கள். பின் திரு முருகனை வழிபாடு செய்தார்கள்.

இராமலிங்கர் பிறந்ததின விழா

தாராபுரம் தாலுகா சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தின் சார்பில், ஸ்ரீமத் இராமலிங்க சுவாமிகளின் 141-வது பிறந்த தினவிழா 6-10-63ல் தவத்திரு அடிகளார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திரு எஸ் ஆர். தங்கவேல், திருமதி எஸ். நாமகிரி அம்மையார் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

தவத்திரு அடிகளார் அவர்கள் இராமலிங்கரின் கொள்கையை விளக்கி அரியதோர் சிறப்புரையாற்றினுர்கள்.

இலக்கிய மன்றத் தொடக்க விழா

நெய்க்காரபட்டி தமிழ் இலக்கிய மன்றத் தொடக்க விழாவும், பாரதிவிழாவும் 7-10-63ல் நடைபெற்றது. திரு. பா. கெங்கா பாஸ்கரன் அனைவரையும் வரவேற்ருர். தவத்திரு அடிகளார் அவர்கள் அரியதோர் உரையாற்றினுர்கள் புலவர் மா. வை. சீனிவாசன் நன்றி கூறினுர்.

கதர் வாரம் நிறைவு விழா

இராமநாதபுரம் கதர்வார நிறைவு விழா, சேதுபதி மன்னர் அரண்மனை முன்பு 8-10-63ல் தவத்திரு அடிகளார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இராமநாதபுரம் மாவட்ட கதர் அலுவலர் திரு. ஆதி நாராயணன் வரவேற்புரை ஆற்றினுர். பரமக்குடித்தொகுதி தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர் திரு. சி. சீனிவாசன் பி.ஏ. (ஹானர்ஸ்) பி. எல்., திரு. கே. எஸ். கிருஷ்ணமூர்த்தி பி. ஏ. பி. டி. ஆகியோர் சிறப்புச் சொற்சொற்பொழிவாற்றினர்.

பிரான்மலையில் காந்தியடிகள் பிறந்த நாள் விழா

பிரான்மலையில் மண்டல காங்கிரஸ், கிராம காங்கிரஸ், இளைஞர் காங்கிரஸ் ஆகிய வற்றின் சார்பாக 9—10—63 காந்தியடிகளின் பிறந்தநாள் விழா தவத்திரு அடிகளார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கிராம காங்கிரஸ் தலைவர் திரு. சி. முத்துக்குமார் அனைவரையும் வரவேற்றுர். திருப்புத்தூர் தாலுகா காங்கிரஸ் செயலர் திரு. ஆறு. இராமச்சந்திரன், தாலுகா காங்கிரஸ் தலைவர் திரு. பழ. முத்துராமலிங்கம், திரு. வ. இராசகோபாலன், சிங்கம்புணரி ஊராட்சி மன்ற ஒன்றிப்புத் தலைவர் திரு. வெ. வால்மீகி, தமிழ்நாடு சட்டசபை உறுப்பினர் திரு. க. பா. பழனி ஆகியோர் பேசினர்.

தவத்திரு அடிகளார் அவர்கள் பேசுகையில் காந்தியடிகள் கட்சிப்பாகுபாடுகளுக்கும் சாதி வேறுபாடுகளுக்கும் அப்பாற்பட்டவர் என்றும், திறந்த மனத்தோடும், திறந்த உடம்போடும் வாழ்ந்த அவர் வாழ்க்கையில் சூதும் இரகசியங்களும் கிடையாது என்றும் அவர் வாழ்க்கையை முன்மாதிரியாகக் கொண்டு நாம் வாழ வேண்டும் என்றும் குறிப்பிட்டார்கள்.

பிரான்மலை மண்டல காங்கிரஸ் குழுச் செயலர் திரு. உமாமகேச்வரன் நன்றி கூறினுர்.

★

Registered No. M. 7058 THAMILAGAM - Weekly 21-10-63

தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களின்
சமய, இலக்கிய தொடர்ச் சொற்பொழிவுகள்
தொடக்க விழா

இடம்: திருச்சி தேவர் மன்றம்
தேதி: 20—10—63 ஞாயிறு மாலை 4 மணி
தொடக்கஉரை; மேதகு எஸ். செல்லப்பாண்டியன், B.A, B.L. அவர்கள்
தமிழ்நாடு சட்டமன்ற அவைத்தலைவர்.
தலைவர்: திரு கி. இராமலிங்கனார், M.A, அவர்கள்,
தமிழக அரசுத் தமிழ் ஆட்சிக்குழுத் தனித்தலைவர்.

"ஏழில் இருபது"

எனுந் தலைப்பில் தவத்திரு அடிகளார் அவர்கள் பேருரை நிகழ்த்துவார்கள்

அனைவரும் வருக!

திருச்சிநகர அருள்நெறித் திருக்கூட்டம்
திருச்சிராப்பள்ளி.

வெளியிடுவோர், ஆசிரியர்: ஆறு. சுப்பிரமணியன், அடிகளார் அச்சகம், குன்றக்குடி.
இராமநாதபுரம் மாவட்டம். துணை ஆசிரியர்: சாமி பழனியப்பன்.